# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 130/பேரூ/2022**

**நாள்: 7.10.2022**

திரு. இரா. மோகனவேல்,
சின்ன சீரகபாடி, சேலம் மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆட்டையாம்பட்டி பேரூராட்சி, சேலம் மாவட்டம். ... எதிர்மனுதாரர்

சேலம் மாவட்டம், சின்ன சீரகபாடி, கதவு எண்.2/79 அ.கடத்தூர் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. இரா. மோகனவேல் என்பவரின் 04.08.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.08.2022ல் பெறப்பட்டு, 130/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், சின்ன சீரகபாடி, கதவு எண்.2/79 அ.கடத்தூர் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. இரா. மோகனவேல் என்பவர் தமது 4.8.2022 நாளிட்ட புகார் மனுவில் கடந்த 28.7.2022 அன்று குறைதீர் விண்ணப்பத்தினை ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. குணாளனுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பியிருந்ததாகவும், அதற்கான ஒப்புகைச் சீட்டினை வழங்குமாறு அதில் குறிப்பிட்டிருந்ததாகவும், அரசு அலுவலக நடைமுறை நூல் பத்தி 167ல் குறிப்பிட்டுள்ளவாறு மூன்று நாட்கள் கழித்தும் அவர் எவ்வித ஒப்புகையையும் தனக்கு அனுப்பவில்லை என்றும், எனவே உரிய நடவடிக்கை எடுத்து ஒப்புகையை பெற்றுத்தருமாறும், இனிவரும் காலங்களில் அஞ்சல், மின்னஞ்சல்களில் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு ஒப்புகைச் சீட்டினை மின்னஞ்சல் வாயிலாகவோ அல்லது அஞ்சல் வாயிலாகவோ அனுப்பிவைக்க உத்தரவிடுமாறும், செயல் அலுவலர் புரிந்த இக்குற்றத்திற்கு உரிய துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்குமாறும் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார். ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு மின்னஞ்சல் மூலம் மனுதாரர் அனுப்பியுள்ள விண்ணப்பத்தில், ஆட்டையாம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட பழக்கார வீதி அருகில் ஆட்டையாம்பட்டி–காகாபாளையம் நெடுஞ்சாலையில் இடதுபுறம் அமைந்துள்ள ஊர் கிணறு எவ்வித பாதுகாப்புமின்றி திறந்துள்ளது என்றும், இதனால் அக்கிணற்றில் தற்கொலைகள் மற்றும் விபத்துக்கள் நிகழ்ந்து உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன என்றும், எனவே பாதுகாப்பிற்காக

அக்கிணற்றினை இரும்பால் ஆன மூடி அமைத்து மூடிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளதுடன், மேற்கண்ட புகார் குறித்த தனது கடிதத்தினை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை தனக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான நேரடி விசாரணை 27.09.2022 அன்று மேற்கொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட்டு, மனுதாரர் மற்றும் ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு 19.9.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பிவைக்கப்பட்டன. மனுதாரர் திரு. இரா. மோகனவேல் 27.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "சேலம் மாவட்டம், ஆட்டையாம்பட்டி செயல் அலுவலருக்கு, ஆட்டையாம்பட்டியிலுள்ள கிணற்றின் மீது மூடி அமைத்திடவேண்டி என்னால் மின்னஞ்சல் மூலமாக விண்ணப்பம் அனுப்பப்பட்டது. ஆனால் அரசு அலுவலக நடைமுறைநூல் பத்தி 167ன்படி மூன்று நாட்கள் கழித்தும் எனக்கு எவ்வித ஒப்புகையையும் அனுப்பவில்லை. இதுபோன்று மொத்தம் 39 வகையான மனுக்கள் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது. அதற்கான ஒப்புகையை இதுவரையில் எனக்கு ஆட்டையாம்பட்டி பேரூராட்சி மூலம் அனுப்பப்படவில்லை. எனவே, மேற்கண்ட ஒப்புகைச் சீட்டினை மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பிட உத்தரவிடுமாறும், ஒப்புகையை அனுப்பத் தவறிய செயல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறும் இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா. குணாளன் 27.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆட்டையாம்பட்டி பேரூராட்சி 6வது வார்டிலுள்ள கிணற்றின் மீது இரும்பினாலான மூடி போட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், மனுதாரருக்கு அவர் அனுப்பும் மின்னஞ்சல்களுக்கான ஒப்புகையை அந்தந்த விண்ணப்பதாரர்களுக்கு அவ்வப்போது அனுப்பிவைக்கப்படுகிறது. ஆனால், பேரூராட்சியில் பணியாளர் பற்றாக்குறை உள்ள காரணத்தினாலும், குறைந்த அளவிலான அலுவலர்கள் மட்டுமே பணியில் உள்ளதால் பணிச்சுமை அதிகமாகி ஒரிருவருக்கு ஒப்புகை சீட்டு அனுப்பிட இயலவில்லை. இனிவரும் காலங்களில் மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ பெறப்படும் விண்ணப்பங்களுக்கு அவற்றிற்கான ஒப்புகையை மனுதாரர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பாக இம்முறைமன்றத்திற்கு என்னால் அளிக்கப்பட்டுள்ள 19.9.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படியும் இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது 19.9.2022 நாளிட்ட கடிதத்தில் சேலம் மாவட்டம், ஆட்டையாம்பட்டி பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.9(4) நாள் 31.3.2022ன்படி காகாபாளையம் மெயின்ரோட்டில் நெடுஞ்சாலைக்கு இடதுபுறம் அமைந்துள்ள ஊர்க் கிணற்றை இரும்பினாலான மூடி போட்டு மூடுவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பேரூராட்சிகளின் ஆணையரின் உத்தரவுப்படி 15வது நிதிக்குழு திட்டத்தின் (2021–2022) கீழ் மேற்கண்ட பணி தேர்ந்தெடுக்கப்பட்டு, உரிய நிர்வாக அனுமதிக்காக பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள தென்றும், நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் விதிமுறைகளின்படி மேற்கண்ட பணி செய்து முடிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம், வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட 19.09.2022 நாளிட்ட விளக்க அறிக்கை மற்றும் ஆவணங்கள்

ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் அளித்துள்ள புகார் மனுவில், தான் ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு 25.7.2022 அன்று குறைதீர் விண்ணபத்தினை மின்னஞ்சல் மூலம் அனுப்பியிருந்ததாகவும், அதற்கான ஒப்புகையை அரசு அலுவலக நடைமுறை நூல் பத்தி 167ன்படி மூன்று நாட்களுக்குள் அனுப்பிவைக்கவில்லை என்றும், எனவே தமக்கு அளிக்கப்படவேண்டிய ஒப்புகையை பெற்றுத்தருமாறும், இனிவரும் காலங்களில் அஞ்சல் மற்றும் மின்னஞ்சல் மூலம் பெறப்படும் விண்ணபங்களுக்கு ஒப்புகையை மின்னஞ்சல் அல்லது அஞ்சல் வாயிலாக அனுப்பிவைக்க உத்தரவிடுமாறும், இக்குற்றத்திற்கு செயல் அலுவலர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறும் கோரியுள்ளார்.
- மனுதாரர் ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு 25.7.2022 நாளிட்ட குறைதீர் விண்ணபத்தினை அளித்துவிட்டு, ஒரு வார காலத்திற்குள் 4.8.2022ல் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளித்துள்ளார். மிகக்குறுகிய கால இடைவெளியில் அதுவும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்பட்ட புகார் செயல் அலுவலருக்கு சென்று சேர்ந்துள்ளது குறித்து ஊர்ஜிதமான நிலையில், இம்முறைமன்ற நடுவத்திற்கு தனது புகார் மனுவினை அளித்துள்ளார்.
- மிகவும் குறிப்பாக தனது விண்ணபங்களுக்கு ஒப்புகையை மட்டுமே அதுவும் மூன்று நாட்களுக்குள் அனுப்பிடவேண்டும் என்பதை அரசு அலுவலக நடைமுறை நூலில் இடம்பெற்றுள்ள பத்தி 167–ஐ குறிப்பிட்டுக் கோரும் மனுதாரர் புகாருக்கு பேரூராட்சி செயல் அலுவலரால் பல்வேறு பணிகளுக்கிடையே ஒப்புகை சீட்டினை அளிக்கவில்லை என்றும் இதற்காக செயல் அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி புகார் அளித்துள்ளதும் ஏற்கக்கூடியதாக இல்லை.
- பொதுப் பணி ஆற்றிடும் பொது அலுவலரை குறைகூறுவதையும், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை முன்வைப்பதையும் மனுதாரர் தவிர்த்திடவேண்டுமென்று இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.
- மேலும், 25.7.2022ல் செயல் அலுவலருக்கு அனுப்பிவைத்துள்ள புகார் மனுவிற்கு ஒப்புகை அளிக்கவில்லை என்று 4.8.2022லேயே இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனுவினை அளித்துள்ளதால், கால இடைவெளி மற்றும் கால அவகாசம் ஆகியவற்றிற்காகக்கூட மனுதாரர் காத்திருக்கவில்லை என்பதை அவரது செயல் உணர்த்துகிறது.
- ஆட்டையாம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட பழக்கார வீதி அருகில் ஆட்டையாம்பட்டி–காகாபாளையம் நெடுஞ்சாலையின் இடதுபுறம் அமைந்துள்ள ஊர் கிணற்றை இரும்பினாலான மூடி கொண்டு மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளதும், நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டவுடன் உரிய விதிமுறைகளின்படி அப்பணி செய்துமுடிக்கப்படுமென்றும் ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.
- மேலும், பேரூராட்சியில் பணியாளர் பற்றாக்குறை காரணமாக குறைந்த அளவிலான பணியாளர்களே உள்ளதால், பணிச்சுமை காரணமாக ஒப்புகை சீட்டு அனுப்பிட இயலவில்லை என்றும், இனிவரும் காலங்களில் மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ பெறப்படும் விண்ணபங்களுக்கு மனுதாரர்களுக்கு ஒப்புகை அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

6. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், சேலம் மாவட்டம், ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அவரது அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மனுதாரரின் புகார் மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்துவைக்கலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்து, அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும், மின்னஞ்சல் மூலமாக பெறப்படும் புகார் மனுக்கள் குறித்தும், அவற்றிற்கான ஒப்புகையை மனுதாரர்களுக்கு வழங்குவது குறித்தும் ஒட்டுமொத்த பேரூராட்சிகளுக்குமான பொது அறிவுறுத்தங்களை பேரூராட்சிகளின் ஆணையாளர் பிறப்பித்து அதனை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மற்றும் செயல் அலுவலர்களுக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**The Executive Officer is directed to send acknowledgement to the petitioners then and there without delays. He should adhere to the D.O. Manual (D.O.M.) instructions scrupulously. The Assistant Director of Town Panchayat, Salem District is instructed to ensure this.**

2022ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 7-ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**பெறுநர்**

1. திரு. இரா. மோகனவேல்,
   2/79, அ. கடத்தூர், சின்ன சீரகபாடி,
   சேலம்–636 308.
2. செயல் அலுவலர்,
   ஆட்டையாம்பட்டி பேரூராட்சி,
   ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம்–637 501.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   சேலம் மண்டலம், சேலம்
4. பேரூராட்சிகளின் ஆணையாளர்,
   பேரூராட்சிகளின் ஆணையரகம்,
   நகர் நிர்வாக அலுவலகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி நகர், சென்னை–28.
5. இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
   இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி\

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

**செயலாளர்.**